# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM I

8108540

C

1. District மாவட்டம்: Tiruppur PS காவல்நிலையம்: V&AC Year ஆண்டு: 2023 FIR No. முதஅ எண்: Cr.03/2023/AC/TPR Date நாள்: 06.07.2023

2. (i) Act சட்டம்: The PC Act 1988 as amended Sections பிரிவுகள்

(ii) Act சட்டம்: by the PC (Amendment) Sections பிரிவுகள்

(iii) Act சட்டம்: Act 2018 Sections பிரிவுகள்

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும்:

3. (a) Occurrence of Offence Day குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல்: 12.04.2023 Date to நாள் வரை: 05.07.2023

Time Period நேர அளவு Time from நேரம் முதல்: 15.00 hrs Time to நேரம் வரை: 21.30 hrs

(b) Information Received at PS Date காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 06.07.2023 Time நேரம்: 00.00 hrs

(c) General Diary Reference Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்: 06.07.2023 Time நேரம்: 08.00 hrs

4. Type of Information Written/ Oral தகவலின் வகை எழுத்து மூலம் / வாய் மொழியாக: Written Tamil

5. Place of Occurrence (a) Direction and Distance from PS குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்: At about 5Km South East

Beat Number முறைக் காவல் எண் (b) Address முகவரி: Near KSC School Old Bus Stand, Tiruppur

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S. இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District மாவட்டம்: -

6. Complainant /Informant (a) Name குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: V. Sridevi (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர்: Velliangiri

(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு: 42/2023 (d) Nationality நாட்டினம்: Indian (e) Passport No வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்: -

Date of Issue வழங்கப்பட்ட நாள்: - Place of Issue வழங்கப்பட்ட இடம்: -

(f) Occupation தொழில்: Block Educational Officer Nambiyur Erode. Address: Door No. 10, State Bank Colony Rayapuram Extension, Tiruppur.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Smt. Amutha, District Educational Officer (Elementary School) Tiruppur

8. Reasons for delay in reporting by the complainant / Informant குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

-

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ........................................ on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .................... பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 06/07/2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

[signature]
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 06.07.2023

Name: பெயர் K. Sasilekha
Rank: நிலை Inspector of Police. No. எண்
VSAC, Tiruppur
06.07.2023

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, தலைமைக் குற்றவியல் நீதிக்துறை நடுவர் நீதிமன்றம், திருப்பூர் அவர்கள் முன்பாக.

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்றஎண். 03/2023/AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் K.சசிலேகா ஆகிய நான் 06.07.2023-ம் தேதி காலை 08.00 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது திருமதி.V.ஸ்ரீதேவி, த/பெ.வெள்ளியங்கிரி, கதவு எண் 10, ஸ்டேட் பேங்க் காலனி, ராயபுரம் விரிவு, திருப்பூர் என்பவர் திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி எழுத்து மூலமாக கொடுத்த புகாரின் விபரம் பின்வருமாறு அனுப்புநர் V.ஸ்ரீதேவி, த/பெ.வெள்ளியங்கிரி, கதவு எண்.3 ஸ்டேட் பாங்க் காலனி, ராயபுரம் விரிவு, திருப்பூர். செல் நம்பர் 9500775464. பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, திருப்பூர். நான் திருப்பூர் மாவட்டம், ராயபுரம் விரிவு, கதவு எண்.3 ஸ்டேட் பாங்க் காலனியில் வசித்து வருகிறேன். நான் தற்போது ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் கல்வி மாவட்டம், நம்பியூர் வட்டார கல்வி அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் 08.01.1999 தேதி இடைநிலை ஆசிரியராக பணியில் சேர்ந்து திருப்பூர் மாவட்டம், செல்லப்பபுரம் அரசு நடுநிலைப்பள்ளியில் பணிபுரிந்தேன். 22.12.2006 தேதி தலைமை ஆசிரியராக பதவி உயர்வு வழங்கப்பட்டு திருப்பூர் மாவட்டம், பாரப்பாளையம் அரசு நடுநிலைப்பள்ளியில் பணிபுரிந்தேன். நான் தலைமை ஆசிரியராக பதவி உயர்வு பெற்ற பின்னர் எனக்கு தலைமை ஆசிரியருக்கான பணிவரன்முறை ஆணை வழங்கவில்லை. இந்நிலையில் நான் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து 10 வருடங்கள் முடிவுற்றதால் தேர்வு நிலையாக (selection grade) 22.12.2016 தேதி தகுதி பெற்றேன். தலைமை ஆசிரியருக்கான பணிவரன்முறை ஆணை வழங்க கோரி 2006-ம் வருடம் முதல் நான் வட்டார கல்வி அலுவலகத்தில் தொடர்ந்து பலமுறை மனுக்கள் கொடுத்துள்ளேன். எனது மனுக்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேலும், 2016-ம் வருடம் முதல் தேர்வுநிலை சம்பளத்திற்கான ஆணை, தேர்வு நிலை சம்பளம் மற்றும் நிலுவை தொகைகளை கேட்டு நான் வட்டார கல்வி அலுவலகத்தில் தொடர்ந்து பலமுறை மனுக்கள் கொடுத்துள்ளேன். அந்த மனுக்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. திருப்பூர் கல்வி மாவட்டம்,

காதர்பேட்டையில் உள்ள மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து வந்த போது 05.04.2023 தேதி திருப்பூர் தெற்கு வட்டார கல்வி அலுவலர் திரு.ஜஸ்டின்ராஜ் அவர்களிடம் தலைமை ஆசிரியருக்கான பணிவரன்முறை ஆணை வழங்க கோரியும், தேர்வுநிலை ஆணை மற்றும் நிலுவை தொகைகளை வழங்க கோரியும் மனு கொடுத்தேன். வட்டார கல்வி அலுவலர் அவர்கள் திருப்பூர் மாவட்ட கல்வி அலுவலர் (தொடக்க கல்வி) அவர்களுக்கு பரிந்துரை செய்வதாக சொன்னார். இந்நிலையில் வட்டார கல்வி அலுவலருக்கான பதவி உயர்வு முன்னுரிமை பட்டியலுக்கு நான் தகுதி பெற்றிருந்ததால் சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களை மாவட்ட கல்வி அலுவலரிடம் சமர்ப்பிக்க வட்டார கல்வி அலுவலர் அறிவுறுத்தினார். எனது வட்டார கல்வி அலுவலர் பதவி உயர்வு முன்னுரிமை பட்டியலுக்கு எனக்கு தலைமை ஆசிரியருக்கான பணிவரன்முறை ஆணை தேவைப்பட்டது. அதனால் நான் 12.04.2023 தேதி மாலை சுமார் 3 மணியளவில் வட்டார கல்வி அலுவலர் பதவி உயர்வு முன்னுரிமை பட்டியலுக்கான விண்ணப்ப படிவத்துடன் திருப்பூர் பழைய பேருந்து நிலையம், கே.எஸ்.சி பள்ளி அருகில் உள்ள திருப்பூர் மாவட்ட கல்வி அலுவலகத்தில் மாவட்ட கல்வி அலுவலர் (தொடக்க கல்வி) திருமதி.அமுதா அவர்களை அவரது அலுவலகத்தில் நேரில் சந்தித்து பணிவரன்முறை ஆணையும், தேர்வுநிலை ஆணை மற்றும் தேர்வு நிலைக்கான நிலுவை தொகைகளை வழங்க கேட்டேன். அப்போது அவர் மேற்படி வேலைக்களுக்கு சேர்த்து ரூ.50,000/- தனியாக தர வேண்டும் என்று என்னிடம் சொன்னார். அதற்கு நான் நானே கடனால் கஷ்டத்தில் இருக்கிறேன். என்னிடம் பணம் இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர் உனக்கு லட்சகணக்கில் பணம் வரப்போகிறது. நீ பதவி உயர்வில் செல்ல போகிறாய் சந்தோஷமாக கொடு என்று சொன்னார். அதன்பின்னர் நான் வந்துவிட்டேன். இந்நிலையில் வட்டார கல்வி அலுவலர் பதவி உயர்வு கலந்தாய்வு 10.05.2023 நடைபெற்று நான் 22.05.2023 தேதி வட்டார கல்வி அலுவலராக பதவி உயர்வு பெற்று ஈரோடு மாவட்டம், நம்பியூர் வட்டார கல்வி அலுவலராக பணி ஆணையை கிடைத்தது. நான் காதர்பேட்டை மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியர் பொறுப்பை மூத்த ஆசிரியர் மேரி என்பவரிடம் 26.05.2023-ம் தேதி ஒப்படைத்துவிட்டு அன்றையதினமே நம்பியூர் வட்டார கல்வி அலுவலராக பணியேற்றுக் கொண்டேன். இந்நிலையில் மாவட்ட கல்வி அலுவலர் திருமதி.அமுதா அவர்கள் இரண்டு மூன்று முறை எனது செல்போனுக்கு அழைத்தார். நான் செல்போன் அழைப்பை எடுக்கவில்லை. அதன்பின்னர் அவர் திருப்பூர் தெற்கு வட்டார கல்வி அலுவலர் திரு.ஜஸ்டின்ராஜ் அவர்களிடம் சொல்லி என்னை நேரில் வந்து பார்க்குமாறு கூறினார். இதனையடுத்து நான் 03.07.2023 தேதி காலை சுமார் 11.00

மணியளவில் திருப்பூர் மாவட்ட கல்வி அலுவலகத்திற்கு சென்று மாவட்ட கல்வி அலுவலர் திருமதி.அமுதா அவர்களை நேரில் சந்தித்து தலைமை ஆசிரியருக்கான பணிவரன்முறை ஆணை, தேர்வுநிலை ஆணை மற்றும் நிலுவை தொகை சம்பந்தமாக கேட்டேன். அதற்கு அவர் அன்றைக்கே உங்ககிட்ட சொன்னேன். ரெடி பண்ணி கொடு எப்ப தருகிறீர்கள் என்று கேட்டார். என்னிடம் பணம் இல்லாமல் தான் எனது நகைகளை அடகு வைத்திருக்கிறேன் என்று சொன்னேன். அதெல்லாம் இருக்கட்டும். நான் தலைமை ஆசிரியருக்கான பணிவரன்முறை ஆணையை முதலில் கொடுக்கிறேன். அந்த ஆர்டருக்கு எனக்கு ரூ.5,000/- கொடுத்துவிட்டு ஆர்டரை வாங்கி கொள் என்று சொன்னார். மேலும் தேர்வுநிலை ஆணை மற்றும் நிலுவை தொகை வழங்குவதற்கு நான் ஏற்கெனவே கேட்ட தொகையில் மீதி தொகையினை கொடுத்தால் தான் ஆர்டர் கொடுப்பேன் என்று கண்டிப்பாக சொன்னார். அதற்கு நான் சரி இரண்டு நாட்களில் பணத்தை ரெடி பண்ணிவிட்டு போன் செய்துவிட்டு வருவதாக சொன்னேன். அதற்கு அவர் சரி என்று சொன்னார். இந்நிலையில் 05.07.2023 தேதி இரவு சுமார் 9.30 மணிக்கு நான் எனது செல்போன் எண்ணிலிருந்து மாவட்ட கல்வி அலுவலர் அவர்களது செல்போன் எண் 9944000270 -க்கு தொடர்பு கொண்டு பணிவரன்முறை ஆணை சம்பந்தமாக கேட்ட போது அவர் நாளைக்கு அம்மாபாளையத்தில் உள்ள பள்ளியில் மீட்டிங் உள்ளது. மீட்டிங் முடித்து 11.00 மணிக்கு அலுவலகம் வருவதாக சொன்னார். மேலும், பணி வரன்முறை ஆர்டர் ரெடியாக உள்ளது. பணம் ரெடி செய்து விட்டாயா என்று கேட்டார். அதற்கு நான் பணம் ரெடி செய்துவிட்டதாக சொன்னேன். அதற்கு அவர் நாளை காலை அலுவலகம் வந்து பணத்தை கொடுத்துவிட்டு ஆர்டரை வாங்கி கொள் என்று சொன்னார். எனக்கு தலைமை ஆசிரியருக்கான பணிவரன்முறை ஆணை வழங்க திருமதி.அமுதா, மாவட்ட கல்வி அலுவலர், திருப்பூர் அவர்கள் ரூ.5,000/- லஞ்சமாக கேட்கும் பணத்தை கொடுக்க விருப்பமில்லை. எனவே அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். Sd/-xxxx V.Sridevi 06/07/2023. Sir, Received the complaint on 06.07.2023 at 08.00 hrs and made preliminary verification between 08.00 hrs to 08.45 hrs and registered a case in Tiruppur V&AC Cr.No.3/2023/AC/TPR u/s 7 of PC Act 1988 as amended by PC (Amendment) Act 2018 on 06.07.2023 between 08.45 hrs to 09.45 hrs. Sd/- xxxx (K.Sasilekha). 06/07/2023 Inspr. V&AC, TPR.

Original FIR along with original written complaint of Tmt.V.Sridevi, D/o Velliangiri, Door.No.10, State Bank colony, Rayapuram Extn, Tiruppur is submitted to the Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Chief Judicial Magistrate Court, Tiruppur and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

(K.Sasilekha),
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Tiruppur. 06.07.2023